விலை: சதம் 60

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 22 ரம்ழான் 3 இதழ் 142
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-7-1981

இதமான சொகுசான
சவாரிக்கு
HERO
சைக்கிள்கள் தாராளமாகக்
கிடைக்கின்றன.
நகர விலைகளிலும் குறைவு

பல்கன் ஏஜென்சி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

## இவ்வாரம் விசாரணை

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் தொடர்பாக நடைபெற்ற உயர் மட்டப் பொலிஸ் விசாரணைக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து, குற்றம் காணப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணை இவ்வாரம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சில பொலிஸார் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

# தமிழக அரசுமீது மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

## ‘‘எம்.ஜி.ஆர்.பொய்பேசுகிறார் மத்திய அரசு கவனிக்கும்’’

சென்னை, ஜுலை 5

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானா, தமிழக அரசு மீது பல குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியிருப்பதுடன், தமிழ்நாட்டில் மோசமான ஆட்சி நிலவுவதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### ஹரிஜனர்கள் புறக்கணிப்பு

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்திருந்த திரு. யோகேந்திரா மக்வானா, இராமநாதபுரத்திற்குச்சென்று ஹரிஜனர் பற்றித் தெரிவிக்கப்பட்ட புகார்கள் குறித்து நேரில் அறிந்தார். இதனைத் தொடர்ந்து சென்னை திரும்பிய அவர், முக்கிய சில தலைவர்களையும், அரசியல் பிரமுகர்களையும் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இதன் பின்னரே அவர், எம். ஜி. ஆர். அரசு மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார்.

ஹரிஜனர்கள் மதம் மாறியதற்கு தமிழக அரசே முழுக் காரணம் என்று நிருபர்களிடம் தெரிவித்த திரு. யோகேந்திரா மக்வானா, ஹரிஜனர்கள் புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்கள்மீது பொலிஸார் ஏவிவிடப்பட்டதே ஹரிஜனர்களின் மனமாற்றத்துக்குக் காரணம் என்று குறை கூறியுள்ளார்.

### “எம். ஜி. ஆர் பொய் பேசுகிறார்”

பத்திரிகை நிருபர்களிடம் நேற்று அவர் பேசுகையில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மிகவும் பொய்பேசுகின்றார் என்று குற்றம் சுமத்தினார்.

‘‘தமிழக அரசுமீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. நான் இங்கு நேரில் அந்தநதில் இந் குற்றச்சாட்டுக்கள் உண்மை என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் காணப்பட்டன.’’ என்று தெரிவித்த மத்திய ராஜாங்க அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானு; ‘‘எரிசாராய ஊழல் புகார்மீது மத்திய அரசு வேறு கமிஷனை நியமித்திருப்பதை தமிழக முதலமைச்சர் புறக்கணித்து, அலட்சியப்போக்குடன் பேசியிருப்பது அவரது அறியாமையையே காட்டுகிறது’’ என்று தெரிவித்தார்.

தமிழக அரசு மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள், தமிழக அரசின் எதேச்சாதிகாரப் போக்குப் பற்றி மத்திய அரசு கவனிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

### பலர் கைது

இதற்கிடையே, சென்னையில் த்மிழக அரசுக்கு எதிராக ஊர்வலம் நடத்த முயன்ற [இந்திரா] இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் பலர் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

எரி சாராய ஊழல் புகார் மீது தமிழக அரசு நியமித்த கமிஷனைக் கலைக்குமாறு கோரியும், தமிழக அரசுக்கு எதிரான வேறு சில குற்றச்சாட்டுக்கள் குறித்து மத்திய அரசு விசாரணைசெய்ய வேண்டுமென்று கோரியும் இளைஞர் காங்கிரஸ் ஊர்வலமாகத் தமிழக முதல்வரின் இல்லத்திற்குச் செல்ல இன்று திட்டமிட்டிருந்தனர். இந்த ஊர்வலத்தைக் கலைத்த பொலிஸார் நூற்றுக்கும் அதிகமான இந்திரா காங்கிரஸ் தொண்டர்களைக் கைதுசெய்தனர்.

### மற்றுமொரு ஊர்வலம்

நிலைமை இவ்வாறிருக்க, திரு. ஜி. நாராயணசுவாமி

[6ம் பக்கம் பார்க்க]

யாழ். வன்செயல் சம்பவங்கள்:

## பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவி

[யாழ்ப்பாணம்]

வன்செயல் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்டஉதவி வழங்குவதற்காக சட்டத்தரணி ம. அமரசிங்கம் முன்வந்துள்ளார்.

பிரபல சட்டத்தரணிகளின் ஆலோசனையின் மீது நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தைச் சந்தித்து, கலந்துரையாடிப் பல விபரங்களையும் அறிந்துகொண்டார்.

சுன்னாகத்தில் பாதிக்கப்பட்ட சிலர், சட்டத்தரணி ம. அமரசிங்கத்தின் இலவச உதவியைப் பெற முன்வந்துள்ளனர். இவ்வுதவி பெற யாழ்ப்பாணத்தில் நேற்றுவரை எவரும் முன்வரவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்காக நஷ்டஈடு கோரி, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன. நாளை நஷ்டஈடு வழங்குவது தொடர்பான ஆலோசனைகளைச் செய்ய, சம்பந்தப்பட்டவர்கள் இவரைச் சந்திக்கவுள்ளனர். [க]

திருக்கேதீஸ்வரம் மாந்தை சந்தியில்

## குழந்தைகளுடன்பெண்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்

[நமது மன்னார் நிருபர்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்து அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி திருக்கேதீஸ்வரம் மாந்தைச் சந்தியில் நேற்றுக்காலை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதத்தைத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் ஆரம்பித்துவைத்தார்.

வவுனியா எம். பி திரு. சி. சிவசிதம்பரம், பட்டிருப்பு எம். பி. திரு பி. கணேசலிங்கம், மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், திருமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன்,

(6-ம் பக்கம் பார்க்க]

வட இலங்கையில் ஆகக்கூடிய அளவிலான போட்டோஸ்ரட் பிரதிகள் எடுப்பதற்கு
நவீன யந்திரம் வைத்திருப்போர்

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.
யாழ்ப்பாணம் போன்: 8267

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலவரங்களினால் எரிக்கப்பட்ட பூபாலசிங்கம் புத்தகசாலை
மீண்டும் வழமையான சேவைக்கு இன்றுமுதல் திரும்புகிறது.
உங்களுக்குத் தேவையான சகல நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்துக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்
வடஇலங்கையில் பெயர்பெற்ற புத்தக நிறுவனம்,

பூபாலசிங்கம் புத்தகசாலை
4, பஸ்நிலையம் முன்பாக, - - யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் வீதியில் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 85 கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம். 0229

இந்த 10, 12 அடி நீளமுள்ள பிடவைக்கடைக்குரிய அலுமாரிகள் விற்பனைக்குண்டு. கஜேந்திரஸ் 9, நவீன சந்தை கன்னூடம். 0227

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புதிய நிலையிலுள்ள 29 ஸ்ரீ தொடரிலக்கமுள்ள "வேலண்ட்-செர்பா-840" பிரயாணிகள் வான் (டீசல்) விற்பனைக்குண்டு. சோ. பரமசாமி, 30/1, நிக்கல்ஸ் லேன், கச்சேரி-நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 0230

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு, கௌசல், 274, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8247 (0214)

மறவன்புலோவில் பெரிய நாவல் மரம் ஒன்று விற்பனைக்கு இருக்கின்றது. விபரம்: சந்தனகம், 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (0220)

யாழ்ப்பாணம் மூன்றும் முருக்குத்தெருவில் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. (இந்நமற்ற உறுதி) தொடர்பு கௌசல், திருமதி அழகரத்தினம், C/o திரு. A. அல்போன்ஸ், இல: 55, நாவலர் முருக்குத்தெரு யாழ்ப்பாணம். 0222

வாடகைக்கு

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கு கிட்ட மின்சாரம் தண்ணீர் சகல வசதிகளுடன் ஒரு வீடும், கொக்குவில் கிழக்கில் மாணவர்களுக்குத் தங்குவதற்கு ஒரு வீடும் வாடகைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம்-0228 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 0228

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு வியாபார அனுபவம் உள்ளவரும் வர்த்தகக்கணக்கியலில் சித்தி பெற்றவரும் ஆங்கிலத்தில் எழுத வாசிக்க தெரிந்தவருமான கவுண்டர் கிளார்க் தேவை. 10-7-81-ந் திகதிக்குமுன் தகைமை, அனுபவத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0213, C/o 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம். 0213

பிடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமும் 5 வருட சேர்ச்சியுமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு: எ. நாகமுத்து அன் சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 0216

யாழ்ப்பாணம், ரோயல் டிஸ்பென்சரிக்கு நல்ல ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. தராதரம் மற்றும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 0205

### வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரவியல், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electrical Wiring, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை விதிமுறைப் பயிற்சி வகுப்புக்கள் 11-7-81இல் ஆரம்பம். தங்குமிட வசதியும் உண்டு. C. E. T யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி இனிமாவிற்கு முன்னால்) 22, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். [0175]

பருத்தித்துறை நகரசபை

## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்–1981

மாட்டிறைச்சிக்கடை இல. 2

மாட்டிறைச்சிக்கடை இல. 2க்கு 1981-ம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்ட போது விதிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக குறித்த கடையை விற்பனை செய்யும் வேறு எந்த தோக்கத்திற்காவது 15-07-81 தொடக்கம் 31-12-81 வரை குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் குறிப்பிட்ட தொகைத்தைக் குறிப்பிட்டு 13-07-81-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ரூபா 500/- செலுத்தி ஏலம் கூறுவதற்கு பங்கு பற்ற பதிந்துகொள்ளும்படி அறிவிக்கப்படுகிறது.

14-07-81-ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கு குறிப்பிட்ட இடத்தில் ஏலம் கூறப்படும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ம. வேலும்மயிலும்,
தலைவர்,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
01-07-81 (0223)

## பின் முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அம்பிகைபாகர் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் 1115

கணபதிப்பிள்ளை அம்பிகைபாகர் மைம் பெண் இராசபாக்கியம், பருத்தித்துறை.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின் முற்றுகும்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம் மன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும்கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இன்று 1981-ம் ஆண்டு சித்திரை மாதம் 15-ந் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி

ஒப்பம்
க. செல்வராஜா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
(0206) பருத்தித்துறை.

யாழ்ப்பாணம் மாநகரசபை

## அறிவித்தல்

புனித அந்தோனியார் வீதியை நெடுகக் கொண்டு பாஷையூர்க் அமைந்திருக்கும் பாஷையூர் விளையாட்டு மைதானத்திற்கு பாஷையூர் புனித அந்தோனி விளையாட்டு கழக வாரி மைதானமென பெயர் மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதால் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்க எவரேனும் விரும்புவாராயின் இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அப்படியான ஆட்சேபனையை எழுத்து மூலம் எமக்குச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.

கோட்டை,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
06-07-81. (0208)

## பின்னுறுதிக் கட்டளைக்கான அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து மகள் இரத்தினத்தின் மரணசாதன மற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர்.

நாகமுத்து தியாகசேவக்கரசு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

மனுதாரர்.

மரணச்சொத்து நியாயாதிக்கம்
இல. 96 எதிர்.

1. இளையதம்பி சின்னத்துரையும் பெண்
2. செல்லம்மாவும்
3. தம்பையா கணேசன்
4. தம்பையா சிறிஸ்கந்தா
5. முதலித்தம்பி சிவபாதமும் பெண்
6. இராசஜேஸ்வரியும் எல்லோரும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம்

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆடி மாதம் 10-ஆந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

சு. வி. கணேசன்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு ஆனிமாதம் 23ஆந் நாள்.

வரைவு
வி. எஸ். கணேசலிங்கம்
மனுதார் தரணி

0207

விளம்பரம் செய்க வியாபாரம் பெருக

## வருடாந்த திருவிழாவிற்கு யாகசாலை பாவிப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவு

(புலோலி)

இந்துசமயக் கோட்பாட்டிற்கு அமைய உருப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர் கோவிலில் புதிய யாகசாலை அமைக்கப்படவில்லை என்று தொடரப்பட்ட வழக்கில், வருடாந்த திருவிழாவிற்கு யாகசாலையைப் பாவிப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடைஉத்தரவைப் பிறப்பித்துள்ளது.

"இக் கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட யாகசாலை இந்துசமயக் கோட்பாட்டிற்கு அமைய அமைக்கப்படவில்லை எனவே இந்த யாகசாலையைப் பாவிக்கக் கூடாது" என கோவில் பரிபாலனசபை உறுப்பினர்களில் ஒருவரான சின்னத்துரை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான திரு ஜி. சுப்பிரமணியம், திரு எம். ஜெயகிருஷ்ணன் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எஸ் இராஜநாதன் புதிதாக அமைக்கப்பட்ட யாகசாலையை வருடாந்த திருவிழாவிற்குப் பாவிப்பதற்கு இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## ஆரம்பக் கல்விக்கு அடித்தளம் பாலர் கல்வி

(யாழ்ப்பாணம்)

"ஆரம்பக் கல்விக்கு ஆணிவேராக, அடித்தளமாக பாலர் பாடசாலை விளங்கிவருகிறது" இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் மாவிட்டபுரம் நவீன சுவர்வி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"குழந்தையும் தெய்வமும் இருக்கும் இந்த மாவை ஆலயத் தேரோடும் வீதியில் இன்று இன்பமான ஒரு அரிய விளையாட்டுப் போட்டியைக் காணக் கொடுத்துவைத்துள்ளோம்.

"பச்சிளம் பாலர்களை இங்கே பயிற்றுவிக்கும் ஆசிரியைகளின் ஆர்வத்தையும் ஆற்றலையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றேன். செல்வி விஸ்வநாதனையும் அவரின் சக ஆசிரியைகளையும் பாராட்டுகிறேன்" என்றார்.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு சட்டத்தரணி திரு. வி. கி. கணேசலிங்கம் தலைமை வகித்தார். விளையாட்டுப் போட்டியின் இறுதியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் பரிசில்களை வழங்கினார்.

## விசேட ஐந்து ரூபா நாணயம்

[கொழும்பு]

இலங்கையின் அனைத்து வயது வந்தோர் சர்வஜன வாக்குரிமையின் ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தியை நினைவுகூருமுகமாக மத்திய வங்கி விசேட ஐந்து ரூபா நாணயத்தை நாளை வெளியிடுகின்றது. இந்த நாணயத்தை பொதுமக்கள் இலங்கை மத்தியவங்கியின் காசுபீடங்களிலும் கொழும்பில் உள்ள ஏனைய வங்கிகளிலும் நாளை பெற்றுக்கொள்ளலாம். இந்நாணயம் வெளியூர்களில் உள்ள வங்கிகளிலும் கச்சேரிகளிலும் நாலு அல்லது ஐந்து விரைவிலே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென தெரியவருகிறது.

## மகா கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 13-ந் திகதி நடைபெறவிருக்கிறது.


வெளிநாடு செல்பவர்களுக்கு

## விசேட அறிவித்தல்

இந்தியா, இத்தாலி, சிங்கப்பூர், ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உயர்கல்வி, தொழில் நிமித்தம் செல்பவர்களுக்கு, சகலவிதமான ஏற்பாடுகளையும், (அரசாங்க சட்டதிட்டங்கள் உட்பட) குறைந்த விமானக்கட்டண டிக்கட்டுகளுடன் ஒழுங்கு செய்து தரப்படும்

KUMAR, FREIGHT & TRAVEL LANKA Ltd,
307, Galle Road, Colombo 3. Phone 26946

[0217]


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துர்மதி வருடம் ஆனி மாதம் 24-ம் நாள் (8-7-81) புதன்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரை வரும் சுபவேளையில்

| எமது புத்திரன் கலாநிதி ச. விக்கினேஸ்வரன் அவர்கட்கும் | எமது புத்திரி பூ சாந்தி அவர்கட்கும் |
|---|---|

நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெற திருவருள் பாலித்திருக்கிறது. அவ்வமயம் தாங்கள் குடும்பசகிதம் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

அ. சரவணமுத்துவும் பாரியாரும்
சாந்தி நிலையம்,
பொற்பதி வீதி, கொக்குவில்.

செ. பூபாலசிங்கமும் பாரியாரும்
27, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

(0218)

## சிந்திப்பந்தல் தகராறு:
# எட்டு சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டனர்

(மாவிட்டபுரம்)

இளவாலை சிந்திப்பந்தல் கோஷ்டி மோதல் தொடர்பான அடையாள அணிவகுப்பின் 8 சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டனர்.

இளவாலை சிந்திப் பந்தல் என்னுமிடத்தில் மீன்வாடி அமைப்பது தொடர்பாக எழுந்த பிரச்சினை கோஷ்டி மோதலாக மாறி நால்வர் துப்பாக்கிச் சூட்டுக்கும், இருவர் வாள் வெட்டுக்கும் இலக்கானர்.

இச்சம்பவம் குறித்து காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் மாதகல் வாசிகளான ஆசீர்வாதம் ஆரோக்கியநாதன், தொசம்மைப்பிள்ளை அன்ரனி பெர்னாண்டோ, அந்தோனிப்பிள்ளை அமிர்தாஸ், ஜோசப்பிள்ளை அல்பிரட், ஆசீர்வாதம் பத்திநாதர், இராசம்மைப் பிள்ளை கிறிஸ்ரோபர், பெர்னாண்டோ யேசுநாயகம், அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் ஆகிய 8 சந்தேகநபர்களும் அடையாள அணிவகுப்புக்குட் படுத்தப்பட்டனர்.

சாட்சிகளான காயமடைந்த ஆர். அருமைநாயகம், ஆர். கிறிஸ்சாந்து ஆகிய இருவரும் 8 சந்தேகநபர்களையும் அடையாளம் காட்டினர்.

இது தொடர்பாக மேலும் 14 பேரைத் தேடி வருவதாகவும் காங்கேசன்துறைப் பொலிசார் தெரிவித்தனர்.

பதில் நீதிபதி சந்தேகநபர்களைத் தொடர்ந்தும் நீதிமன்றில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், கே. குணரத்தினம் ஆகியோர் ஆஜராகினர். 1ம், 2ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ரி. ஜே. ராஜரத்தினமும், 3ம், 4ம் சந்தேநபர்கள் சார்பில் சட்டத்தரணி க. நடராசாவும், 5ம், 6ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், 7ம், 8ம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசுவும் ஆஜராகினர். (உ)

# வாதரவத்தைகுடிநீர்த்திட்டம் எம்.பி.யிடம் கோரிக்கை

(நெல்லியடி)

புத்தூர் இராமாட்சி மன்றப் பிரதேசத்தில் அமைந்துள்ள வாதரவத்தை குடிநீர்த் திட்டத்தின் கீழ் விரைவானிப் பகுதி மக்களுக்கும் குடிநீர் கிடைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. ஆலாலசுந்தரத்தைக் கோரியுள்ளார்கள்.

கோப்பாய் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை விரைவானிப் பகுதி மக்களுக்கு நீர் வழங்குவதற்காக சுமார் 71,600 ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார் என்றும் அந்நிதி ஒதுக்கீடு இதுவரை பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் அப்பகுதி மக்கள் திரு. மு. ஆலாலசுந்தரத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

60 குடும்பங்கள் வாழும் இப்பகுதி மக்கள் குடிநீருக்காக சுமார் 3 மைல் தூரம் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையினையும் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நேரில் அதைக் காட்சியினைப் பார்க்குமாறும் கோரியுள்ளார்கள். (உ)

# இன்றைய பலன்

ஆனி மாதம் 22ம் திகதி
திங்கட்கிழமை
(6-7-81)

மேடம்- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், புதிரர்களால் பெரும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, அரசினர் ஆதரவும் கிடைக்கும்.

இடபம்- வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், எதிர்பாராத விபத்தும் ஏற்படலாம், எதிலும் நிதான புத்தியுடன் நடந்துகொள்ளவும்.

மிதுனம்- குடும்பத்தில் அமைதி நிலவும், களஸ்திரப் பேச்சும் உண்டு, கண்ணியமான நாள், பெற்றோர் ஆதரவும் உண்டு.

கடகம்-வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும், கடன் தொல்லைகள் அதிகரிக்கும், சிந்தனையை ஒரு வழிப்படுத்தி செயலாற்றவும்.

சிங்கம்- கவர்ச்சிகரமான தினம், தந்தையின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும், பொதுத்துறையில் புகழ்பரவும், புண்ணிய யாத்திரையும் மேற்கொள்ளப்படும்.

கன்னி-அறவழியை நாடுவீர்கள், வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் காணப்படும், இடப்பிரிவுக்கும் இடம் ஏற்படலாம், சுபதினம்.

துலாம்- இலாபகரமான தினம், புதிய வாய்ப்புக்கள் ஏற்படுவதற்கு இடமுண்டு, பொருளாதார நிலை சீர்பெறும், எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்- கடன் தொல்லைகள் அதிகரிக்கும், கூட்டு வியாபாரம் ஏமாற்றம் தரலாம்.

தனுசு- தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அதிக கவனம் எடுக்கவும்.

தனு- அரசியல்வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம், தான் என்ற அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழி அமைக்கும்.

மகரம்- வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, காதலர் வாழ்வில் கற்கண்டான தினம், உறவினர் உதவிக்கு இடமுண்டு.

கும்பம்- அந்நியர்களுடன் பழகுவதில் அதிக கவனம் செலுத்தவும், சகோதரர்மூலம் பிரச்சினை உருவாகலாம், எதிலும் அவதானம்வேண்டும்.

மீனம்- வாழ்க்கையில் சிலருக்கு முன்னேற்றமான இடமுண்டு, வாகன விருத்திக்கு இடமுண்டு, நீர்ப்பாசனப்பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பானதினம்.

சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தனிச்சிங்களத்தில் கடிதங்கள்

[மண்டைதீவு]

விற்பனை திணைக்களக் கொழும்பு தலைமையகத்திலிருந்து யாழ் மாவட்டத்தில் இத்திணைக்களத்திற்கு தற்காலிக ஊழியர்களை நியமிப்பது சம்பந்தமான கடிதங்கள் தனிச்சிங்களத்தில் இவ் ஊழியர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

## மாவை உற்சவம்

(மாவிட்டபுரம்)

சரித்திரப்பிரசித்தி பெற்றதும், ஈழத்து முக்கியஸ்தலங்களில் ஒன்றுமான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் மஞ்சம், திருக்கைலாயவாகன உற்சவம், திருக்கார்த்திகை திருவிழா, வேட்டைத்திருவிழா, பெரிய சப்பறத்திருவிழா, பஞ்சரதபவனி என்பன முக்கிய விசேட உற்சவங்களாக இடம்பெற்று இறுதிநாளான ஆடி அமாவாசையன்று தீர்த்தவிழா இடம்பெறும்.

மாவை ஆலய உற்சவ ஏற்பாடுகள் பற்றி ஆராய வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் மகாநாடு நடைபெற்றது.

உற்சவ காலத்தில் கூடும் பக்தர்களது வசதிக்காக சுகாதார யோக்கியவரத்து, வைத்திய கிகிச்சை, பொலிஸ் பாதுகாப்பு, தொண்டர்சேவையின் விஸ்தரிப்பு போன்ற வற்றை செய்வதென இம் மகாநாடு முடிவு செய்தது.

உற்சவகாலமான 25 தினங்களும் ஆலய சுற்றுடலை புனிதமாகவும், அமைதிப் பிரதேசமாகவும் பேணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு வேண்டிய வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளன.

ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் உற்சவ ஒழுங்குகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

## ஆனி உத்தர விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமிதேவஸ்தான ஆனி உத்தர விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. அன்று நடராஜப்பெருமான் மஞ்சத் திருவிழா வருதலும், மறுநாள் நடராஜப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையும் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி விசேட மேளக்கச்சேரியும், சங்கீதக் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனியாண்டவர்கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 8ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது. (இ)

# மேற்கு லண்டனில் கலவரம் வெள்ளையர்-ஆசியர் மோதல்!

லண்டன், ஜூலை 5

மேற்கு லண்டனில் உள்ள சவுத்போல் பகுதியில் 200 வெள்ளைக்கார இளைஞர்களுக்கும் அங்கு வாழும் உள்ளூர் ஆசிய நாட்டுக்காரர்களுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை கலவரம் மூண்டது.

கலவரம் மூன்று மணிநேரம் தொடர்ச்சியாக நடைபெற்றது. கலவரத்தில் பெருமளவில் பெற்றோல் குண்டுகளும் செங்கட்டிகளும் உபயோகப்படுத்தப்பட்டன என்று லண்டன் பொலிசார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ளூர் ஆசிய நாட்டுக்காரர்களுக்கும் வெள்ளை இனத்தவருக்குமிடையில் இரண்டு வருடங்களுக்கு முன்னரும் பெரும் கலவரம் நடைபெற்றது. அப்போது ஆசிய நாட்டுக்காரர் ஒருவர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## வடமாநில கல்விப் பணிப்பாளரின்
# திடீர்ச் சோதனைக்கு பெற்றோர் பாராட்டு

[புலோலி]

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளின் நிர்வாகச் சீர்கேடுகள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. திரு கே. சிவநாதனின் திடீர் சோதனையின் மூலம் அம்பலத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன.

இப்பகுதி பாடசாலைகளின் நிர்வாகங்களைச் சீர்படுத்தி மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்து முகமாகவே கல்விப் பணிப்பாளர் திரு. சிவநாதன் உயரதிகாரிகள் சகிதம் பாடசாலைகளில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

திரு. சிவநாதன் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொண்டு வரும் இந்நடவடிக்கைக்கு இப் பகுதி பெற்றோர்கள் பாராட்டுத்தெரிவிக்கின்றனர். [உ]

## தாலிக்கொடியைக் கொடுக்க
# மனைவி மறுத்ததால் கணவர் தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

கடன் பழுவைத் தீர்க்க மனைவியிடம் தாலிக்கொடியைக் கணவர் கேட்டபோது மனைவி மறுக்கவே கணவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்!

பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த உடுத்துறை என்னும் இடத்தில் வசிக்கும் ஆ. சிகசுப்பிரமணியம் (வயது 39) என்னும் மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையே இப்பரிதாப முடிவுக்கு ஆளானார்.

மரண விசாரணை அதிகாரி எஸ். இராஜையா மரண விசாரணையை நடத்தினார். பளைப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. சூரியப்பிரகாசம் சாட்சியங்களை ஆஜர் செய்தார். விசாரணையின் பின் தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். [உ]

## கட்டுரைப் போட்டியில் முதலிடம்

(உடுப்பிட்டி)

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவு விழாவையொட்டி யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய கட்டுரைப் போட்டியில் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. க. சுஜாதா மூன்றாம் பிரிவில் முதலாம் இடத்தையும் செல்வி. ஜெ. ஆன் மேரி ஜெயந்தினி மூன்றும் பிரிவில் இரண்டாம் இடத்தையும், நாலாம்பிரிவில் செல்வி இ. கிறிஸ்ரபெல் வசந்தா மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

இக்கட்டுரைப் போட்டி நான்கு பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் குடிசனத் தொகை

[கொழும்பு]

இலங்கையின் மொத்த குடிசனத்தொகை 1கோடி 48லட்சத்து 5 ஆயிரத்து 001பேர் அதில் சிங்களவர் 1 கோடி 9லட்சத்து 85ஆயிரத்து 665 பேர் இலங்கைத் தமிழர் 18லட்சத்து 71ஆயிரத்து 535 பேர் இலங்கை முஸ்லிம் 1லட்சத்து 56ஆயிரத்து 972பேர் இந்தியத்தமிழர் 8லட்சத்து25 ஆயிரத்து 233பேர்.

கடந்த மார்ச்மாதத்தில் நடத்தப்பட்ட குடிசன புள்ளிவிபரமதிப்பீட்டின் ஆரம்ப அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டிருக்கிறது. [து]

# கல்லூரிகளுக்கிடையில் நாடக, பேச்சுப் போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் ஆதரவில் சேக்ஸ்பியர் நாடகப் போட்டியும், ஆங்கிலப் பேச்சுப்போட்டியும் நடைபெறவிருக்கிறது.

ஆங்கிலப் பேச்சுப்போட்டியில் யாழ். பரி யோவான் கல்லூரி, யாழ். சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். கன்னியர்மடம், கனவெட்டி அருணோதயக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகள் போட்டியிட முன்வந்திருக்கின்றன.

சேக்ஸ்பியர் நாடகப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் பரி யோவான் கல்லூரி, யாழ் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகள் போட்டியிட முன்வந்திருக்கின்றன.

இப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இம்மாதம் 24ந் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை யாழ். வை. எம். சி. ஏ. செயலாளர் திரு. பீட்டர் சதாசிவம் செய்து வருகிறார். (உ)

## விளையாட்டுமூலம் நல்ல சமூகத்தை உருவாக்கலாம்

[அரியாலை]

உளநலத்திற்கு கல்வியும், உடல்நலத்திற்கு விளையாட்டும் இன்றியமையாததாகும். உடல் உறுதியாக இருந்தால் தான் நல்ல உள்ளத்தையும் பெற முடியும். விளையாட்டின் மூலம்தான் நல்ல சமூகத்தை உருவாக்க முடியும்.

இவ்வாறு வலிநிழக்கு உதவி

[5-ம் பக்கம் பார்க்க]

**வெஸ்லி** (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
**அரசிளங்குமரி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி ஞாயிறு 2-30
எங்க பாட்டன் சொத்து

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

**லிடோ** யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**ஹரன்** [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு சுஜாதா
சென்ற ஆண்டு சிறந்த நடிகை
சரிதா நடித்த
சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர்
K. பாலச்சந்தரின் **நூல் வேலி** [கலர்]

**வின்சர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
**ஆதி பராசக்தி**
(கலர்—புதிய பிரதி)

வெற்றிநடைபோடும் 50-வது வெற்றித்திருநாளை நோக்கி !
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
**தர்மராஜா** (கலர்)

**ஶ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஶ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ ஜெயமாலினி
**பட்டாக்கத்தி பைரவன்**
(கண்ணைப்பறிக்கும்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - மாலினி பொன்சேகா - ஶ்ரீதேவி நடித்த
**பைலட் பிரேம்நாத்**
10-7-81 முதல்
**ஒரு கை ஓசை**

FINAL WEEK
**RAJAH** Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 and 9-30



Smashing 2nd Glorious Week
40,000 Patrons have seen within one week
See it TODAY
**THE BIG BOSS**
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்


# "இந்துப் பெண்களின் கல்வி இந்துகலாசார அடிப்படையில் அமைய வேண்டும்" - நீதவான் மகேசன்

[புலோலி]

"இந்து மகளிர் வாழ்க்கை எழுச்சி பெறுவதற்கு இந்துப் பெண்களின் கல்வி, இந்துகலாச்சார அடிப்படையிலேயே கட்டப்பட வேண்டுமென்பதற்காகவே எமது முன்னோர் இந்து மகளிர் கல்லூரிகளை நிறுவியுள்ளனர். இந்துகலாச்சாரவளர்ச்சியும் மேன்மையும் எமது மகளிரின் கைகளிலேயே தங்கியுள்ளது"

இவ்வாறு பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி கலைசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இச்சிறப்புரையில் நீதவான் திரு. மகேசன் மேலும் குறிப்பிட்டதாவது:-

"இந்துப் பெண்கள், வீடுகளின் குலவிளக்குப் போன்றவர்கள். அவர்களே சமுதாயத்தில் மேம்பாட்டினை ஏற்படுத்துபவர்கள். இதனைக் கருத்திற்கொண்டு எமது மாணவிகள், வாழ்க்கை வளம்படுத்தி முன்னேறுவதற்கான சாதனைகளைப் புரிய முன்வரவேண்டும். எமது இளம் பெண்கள் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டியவர்கள். இதற்கு இந்து கலாச்சாரம் அவர்களுக்கு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுக்கின்றது.

"பரத நாட்டியம், தமிழ் மக்களின் கண்மணி போன்றது. இந்து கலாச்சாரப்படி இளம் பெண்கள் இல்லறம் புகுமுன் கற்றுத்தேர்ந்து கொள்ள வேண்டிய கலைகளைக் கற்றுத் தேர்ந்து கொண்டால் தான் அவர்களது வாழ்வு வளம்பெற வழியேற்படும்."

## வருடாந்த இல்லப் போட்டி

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் நவரத்தினராஜா இல்லம் 256 புள்ளிகளைப்பெற்று சாம்பியன் கேடயத்தைச்சுவீகரித்துக் கொண்டது. ஏனைய இல்லங்களாகிய பீற்றேர் இல்லம், விற்னி இல்லம், செல்லையா இல்லம் முறையே 194, 203, 252புள்ளிகளைப்பெற்றன.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை] கல்லூரி அதிபர் திரு. செ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி கிட்ணர் பரிசில்கள் வழங்கினார். (கு)

## விளையாட்டு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு. கே. கிட்ணர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிக்கு பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அதிபர் திரு செ. செல்வரத்தினம் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. (க)

## தனிநாயக அடிகளார் நினைவு தின விழா

[புலோலி]

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகளார் நினைவுதின விழா இம்மாதம் 18-ம் திகதி நடைபெறுமென யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் தெரிவித்துள்ளார். [க]

## நாடும் நடப்பும்--

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கத் தயங்குகிறார்கள்' என்று எழுதியிருக்கிறார்.

0 0 0

வவனியா, கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை ஆறு ஏழு மணிக்குமேல் பஸ், ரயில் சேவையில்லை. இதனால் அங்கிருந்து வருபவர்கள் தனியாரின் மினி பஸ்களையோ, வான்களையோதான் நம்பியிருக்க வேண்டும். தனியார் வாகனங்கள் ஏழு மணிக்குப் புறப்படும் என்று அறிவித்தாலும் ஆட்சேரும்வரை காத்திருந்து இரவு ஒன்பது பத்து மணியளவில்தான் அவை புறப்படுகின்றன. இரவு பதினொரு மணிக்குமேல் அகால வேளையில் இந்த வாகனங்கள் யாழ்நகரில் பஸ் நிலையத்திற்குச் சமீபமாகப் பிரயாணிகளை இறக்கிவிட்டுப் போய் விடுகின்றன. இவற்றில் வரும் பெண்கள், குழந்தைகளின் நிலை, நகரிலிருந்து சற்றுத் தூரம் செல்ல வேண்டியவர்களின் கதி? இவை பற்றி யாருக்குக் கவலை!

இப்படி அகாலவேளையில் வந்திறங்கிய ஒரு கணவனுக்கும் மனைவிக்கும்தான் முனியப்பர் கோயிலடியில் தாக்குதல் நடந்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

தனியார் மினிபஸ் சேவை பிரயாணிகளின் நலனையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்!

-ஊர்சுற்றி

## வீட்டுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேரவேண்டும்; வீட்டுக்கு ஒரு 'ஈழநாடு' தேவை; மக்கள் கைகளில், இல்லங்களில் 'ஈழநாடு' தவழவேண்டும். இதுவே நாம் செய்யும் மகத்தான தொண்டு.

சி. நல்லையா
பருத்தித்துறை

## சவாரிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி விவசாயிகள் சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிறுக்கைத்தரவை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பி சுகுணேந்திரன் வழங்குவார்.

## இல்லப் போட்டி

[புலோலி]

சேமமடுக்குள கனிஷ்ட உயர் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டியிலே வவுனியா பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. என். பி. சிவபாதம் பிரதமவிருந்தினராகவும், வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. மு. சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

## தற்கொலை

(புலோலி)

நோயினால் பீடிக்கப்பட்டு இருந்த ஒரு பிள்ளையின் தந்தையான இளைஞரொருவர் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

பருத்தித்துறை திகிரியைச் சேர்ந்த சின்னத்துரை கோபால பிள்ளை (வயது 34) என்பவரே இவ்விதம் மரணமானவராகும்.

இம்மரண விசாரணையின் போது இறந்தவரின் மனைவி இராஜேஸ்வரி (வயது 31) சாட்சியமளிக்கையில், கணவர் சில வருடங்களாக நரம்புத் தளர்ச்சி நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும் இவர் தன்னால் வேலைகள் செய்ய முடியாமல் இருப்பதாகக் கவலையடைந்திருந்தார் என்றும் கூறினார்.

மரணவிசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. பெ. குமாரசாமி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## புதியகுடியரசு விண்ணப்பம்

நியூயோர்க், ஜூலை, 5

தென் பசுபிக்கில் உள்ள சிறிய ராஜ்யமான வனுவாது குடியரசு ஐ. நா. வில் அங்கத்துவம்கோரி விண்ணப்பித்துள்ளது.

ஐ. நா. வில் அங்கத்துவ நாடாக சேரும் பட்சத்தில் ஐ. நா. வின் சாசனத்தின் பிரகாரம் நடந்துகொள்ள தான் தயாராக இருப்பதாக இக்குடியரசு கூறியுள்ளது.

14,700 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவையும், 100,000ஜன த்தொகையையும் கொண்ட இந்நாடு 1887முதல் பிரிட்டினதும், பிரான்ஸினதும் காலனியாக இருந்தது. "நியூ ஹெப்ரிடஸ்" என்ற பெயரைக்கொண்டிருந்த இந்நாடு 1980 ஜூலை 30ம் திகதி சுதந்திரம் பெற்றதும் வனுவாது குடியரசாகத்தன்னைப் பிரகடனப்படுத்தியது.


புரட்சி நடிகரை திரையில் காணத் துடிக்கும்
எம். ஜி. ஆர். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய
இதோ
**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
**எங்கள் தங்கம்**
(புத்தம்புதிய பிரதி — கலர்)

எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
**சுவர் இல்லாத சித்திரங்கள்**

# உணர்வுகள் எரிவதில்லை! [4]

'பேனு' எழுதுவது

திரு. கே. வி. தங்கராஜா மேலும்குறிப்பிட்டிருந்ததாவது

பொருளாதாரவிருத்தி இருதுறைப்பட்டது. ஒன்று தனிப்பட்டவர்களின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. மற்றது அரசாங்கத்தின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. தனிப்பட்டோரின் முயற்சி அனைத்தும் தமிழர் கையிலேயே தங்கியிருக்கிறது. இவர்கள் தமிழர்வதியும் இடங்களில் உள்ள மூலவளத்தை ஆராய்ந்து தகுந்த திட்டத்தை ஒருமுகமாகச் சமர்ப்பித்தாலன்றி அரசிடமிருந்து மிகுந்த பயனைப்பெற முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்துவரும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் ஆதரவும் மலைநாட்டில் வாழும் தமிழ் மக்களின் நட்புறவும் பொதுவாக இலங்கைக்கும் சிறப்பாகத் தமிழினத்தின் பொருளாதார வளத்துக்கும் இன்றியமையாதன என்பதை இங்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

தமிழரிடைகல்வியின்றநடுத்தர வகுப்பினருக்கு அரசாங்கசேவையில் பதவிகள் தேடுவதிலேயே இதுவரை கவனம் செலுத்திவந்தோம். தமிழினத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி நாம் சிந்தித்ததே கிடையாது. இது உண்மையாகவே கவலைக்குரியது. கமக்காரரையும் தொழிலாளரையும் எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்களை நீக்க இனியேனும் நாம் அயராது உழைக்கவேண்டும். இதனோடு இணைந்துள்ள மற்றொரு சிக்கல் தாழ்த்தப்பட்டோர் எனப்

'ஈழநாடு' பேணிக்காக்கும் கல்வி, கலாசார விருத்திகளுக்கான துறைகளில் 'ஈழநாடு' மிகுந்த கவனம் செலுத்தும். இன்று தொழிற்கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று கலாசாரப்பயிற்சியின் அடிப்படையிலேயேதான் தொழிற்கல்வி அமைய வேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுநர் நாட்டுக்குக் கண்ணின் மணி போன்றவர்கள். இவர்கள் மாத்திரமன்றி கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக்கலைஞர்கள், இசைவல்லுநர்கள் தத்துவ ஞானிகள் எல்லோரும் நாட்டிற் பெருக வேண்டும்.

சொந்த நாட்டிலே சகல இனத்தினரும் மதத்தினரும் அரசியல் பொருளாதார உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன் இணைந்து வாழ 'ஈழநாடு' உழைத்து வரும். உலக அரங்கிலே பஞ்சசீலம் இணைந்து வாழ்தல் என்ற அடிப்படையில் ஈழநாடு உலக சமாதானத்தை வளர்க்கத் துணைசெய்யும்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அனைவரிடமிருந்தும் 'ஈழநாடு' கருத்துரைகளை எதிர்பார்க்கின்றது. அத்துடன் குறைபாடுகளை எடுத்துக்காட்ட வாசகர்கள் தயங்கவேண்டியதில்லை. 'ஈழநாடு' தனது எதிர்காலத்தை தமிழ்பேசும் மக்களிடம் ஒப்படைப்பதுடன் தமிழ்மக்களின் நல்வாழ்வுக்கே தன்னையும் சமர்ப்பணம் செய்கின்றது'' என்று திரு. தங்கராஜா

## 'ஈழநாடு' எதிர்காலம் தமிழ் மக்கள் கையில்

பெயரிட்டு நாம் ஒதுக்கி வைத்துள்ள சிறுபான்மைத் தமிழரைப் பற்றியதாகும். மக்களாட்சி சமகநீதி என்றெல்லாம் பேசப்படும் இந்நாட்களிலே தாழ்த்தப்பட்ட சமூகம் எனநம்மில் ஒருபகுதியினரை நாம் ஒதுக்கி வைத்துவிட்டு தமிழினத்தின் உரிமைகளுக்காக நாம் போராடுவது அர்த்தமற்றதாகும். இவர்களுக்கு விளைவிக்கப்பட்டுள்ள அநீதிகள் அனைத்தும் அறவே அகற்றப்படவேண்டும்'

சாதி மதப் பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கி தமிழ்மக்களை ஒருமுகப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு 'ஈழநாடு' பணிசெய்யும். பின்தங்கிய நாடுகளை இன்று பசியும், பிணியும், வறுமையும், வாட்டி வருகின்றன. இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடைமை ஆட்சிதான் சிறந்ததென்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடைமைதான் இலங்கைக்கு உகந்ததென ஒருசாரார் கூறுகின்றனர். உரிமைகள் இழந்து நிற்கும் தமிழ் மக்களைக் காப்பாற்றும் சக்தி பொதுவுடைமை ஆட்சிக்கே உண்டெனக் கூறுவோருமுளர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்கள் இப்பத்திரிகையில் இடம் பெறும்.

வறுமையிலின்றும் விடுதலை பெற்று வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையான வருவாயைத் தேடிக்கொள்வது பொருட் செல்வத்தைப் பொறுத்த மட்டில் வரவேற்க வேண்டியதுதான். அதே வேளையில் அருட்செல்வத்துக்குரிய ஆத்மீகப் பண்புகளையும்

குறிப்பிட்டிருந்தார்.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு மலருக்கு பிலிப் குலேந்திரன் அவர்கள் வழங்கியிருந்த ஒரு செய்தியில் குறிப்பிட்டிருந்த கருத்துக்கள் எமக்கு ஊக்கம் தருவனவாக விருந்தன. அவை வருமாறு:

''இலங்கையில் தமிழ்த் தினசரிகள் உள்ளன. ஆனால் இவைகள் யாவும் தமிழர் மத்தியில் நிகழும் நிகழ்ச்சிகளை கொழும்பிலிருந்தே நோக்குகின்றன. ஆனால் 'ஈழநாடு' இந்த நிகழ்ச்சிகளை தமிழர்கள் மத்தியில் இருந்து கொண்டு அவர்கள் கண்கொண்டே நோக்குகிறது. இதனால் இப்பத்திரிகை நாட்டின் வேறெப்பகுதியிலுமில்லாதவாறு தமிழர்களோடு நெருங்கிய தொடர்புடையதாக அமைந்துள்ளது.

''கொழும்பிலிருந்து 250 மைல்களுக்கப்பால் ஒரு தினசரியை ஆரம்பிப்பதற்கு 'ஈழநாடு' உரிமையாளர்களுக்கு மிகுந்த துணிவும் உறுதியும் இருந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் ஏற்படும் சில ஊக்கத்தைக் கெடுக்கும் அம்சங்களினால் இந்த உறுதியினின்றும் பின்வாங்கக் கூடாது. துணிவும் உறுதியும் பத்திரிகையை உருவாக்குவதற்கு உதவிய பொழுதும் அவை இரண்டும் ஒரு பத்திரிகை தொடர்ந்தியங்க போதியனவாகா. புதினப்பத்திரிகை ஒரு தொழில் திட்டமாக்கப்பட வேண்டும்.

''ஆனால் அதன் உரிமையாளர்களுக்கு கடமைப்படும் அல்லது அவர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு வர்த்தக திட்டமாக ஒரு புதினப் பத்திரிகை அமையக் கூடாது. உரிமையாளர்கள் சார்பில் வியாபாரநோக்கம் இருப்பது உண்மை. எனினும் இதனிலும் மேலாக வாசகர்கள் பத்திரிகையில் திருப்தி அடைந்துள்ளார்கள் என்பதையே பத்திரிகை முக்கியமாக வேண்டி நிற்கிறது. அதில் பிரசுரமாகும் புதினங்கள் தாமதமின்றி உடனுக்குடன் வரும் புதினங்களாகவும் நம்பிக்கையானவையாகவும் இருத்தல் வேண்டும். இன்னும்; பத்திரிகை கருத்துக்களை வெளியிடும்முறை, உண்மையான சேவையை அது மக்களுக்காற்றுகிற தென்ற நம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

''இத்தகைய சேவையை சென்ற பத்தாண்டுகளாக மக்களுக்காற்றிய 'ஈழநாடு' பெரும் மதிப்புக்குரியது. ஆனால் 10 வருட காலம் ஒரு பத்திரிகையின் ஆரம்ப நிலையையே குறிக்கிறது. இதுவரை காலமும் சேவை செய்ததுபோன்று தொடர்ந்தும் 'ஈழநாடு' மேலும் வளர்ச்சியுற்றுத்திகழவேண்டுகிறேன்.''

இலங்கையின் பழம் பெரும் பத்திரிகையாளரும் அரசியல் அறிஞரும் டெல்லி நியூஸ்பத்திரிகையில் சுமார் 17 ஆண்டுகள் ஆசிரியராகப்பணியாற்றியவரும் இலங்கைத் தூதுவராக வெளிநாட்டில் பணிபுரிந்தவருமான திரு. எச். ஏ. ஜே. ஹலுகல்ல ஈழநாடு 10-வது ஆண்டு மலருக்கு அளித்திருந்த வாழ்த்துரையில்

'ஈழநாடு' தனது பத்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்வது குறித்து மற்றவர்களுடன் கலந்து எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளதில் நான் மகிழ்ச்சிஅடைகிறேன். யாழ்ப்பாண மக்களுக்கும் தமிழ் சமூகத்துக்கும் வெகுதிறமையுடன் பாரபட்சமின்றி அது சேவை செய்துள்ளது. இலங்கையில் ஒரே மாகாண தினசரிப் பத்திரிகை இதுதான்.

நாட்டின் தலைநகரிலேயே இருந்து பல பத்திரிகைகள் வெளியாவது ஒரு கோணத்திலிருந்தே நாட்டின் பிரச்னைகளையும் விஷயங்களையும் பார்ப்பதற்கு வழிவகுத்துவிடும். இந்தப்பத்திரிகை எழுத்தாளர்களுக்கு வெளியில் என்ன நடக்கிறது என்பதை நேரில் அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். ஜனநாயகம் எங்கு சிறப்புற்று விளங்கிறதோ அங்கெல்லாம் மாகாணப் பத்திரிகையும் வலிமையுடன் இயங்கிவந்துள்ளன.

இங்கிலாந்தில் மன்செஸ்டர் கார்டியன், தபேமிங்ஹாம், போஸ்ட், லிவப்பூல் கறியர் ஆகிய மாகாணப்பத்திரிகைகள் லண்டனிலுள்ள பிரதான பத்திரிகைகளைப் போல் முக்கியத்துவம் வாய்ந்துள்ளன.

சிறந்த எழுத்தாளர்கள் பரம்பரையைக் கொண்டது யாழ்ப்பணம். இது திரு. தங்கராஜா, திரு. ஹரன் ஆகியோராலும் மற்றும் 'ஈழநாடு' வெளியிடுவதற்கு பொறுப்பாக உள்ளவர்களாலும் சிறப்பாகப்பேணி பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருந்தார்

[நாளை தொடரும்]

## அன்னதானம் இம்முறை இல்லை

[காலி]

காலி சிவன்கோவில் மடத்தில், கதிர்காம அன்னதான மடத்தினர் பல வருடங்களாக கதிர்காம யாத்திரிகர்களுக்காக நடத்திவந்த அன்னதானம் இம்முறை நடைபெறமாட்டாது.

இதுசம்பந்தமாகஅன்னதான மட சபையின் காரியதரிசி திரு. த. தியாகராசா விடுத்துள்ள செய்தியில்; கால சூழ்நிலை பொருத்தமற்று காணப்படுவதால் அன்னதானம் இவ்வருடம் நடத்தமுடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## இப்படியும் நடக்கிறது

யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு பிரபல பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் அண்மையில் 'ஸ்டொக் ரேக்கிங்'— கணக்கெடுப்பு நடந்தது.

கணக்கெடுப்புக்குள்ளான ஒரு, பெரிய 'நெஸ்பிறே' டின் பின்னர் 'கழுகு'ப்பார்வைக்குள்ளானபோது, அந்த 'டின்'னில் ஒன்றுமே இருக்கவில்லை! வெறும் டின்!

இதனைத் தொடர்ந்து சோதனை தீவிரமானபோது - ஒரு கோழித்தீன் 'பேக்'கில் வெறும் தவிடு மட்டும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது!

ஃ ஃ ஃ

'பதினைந்தின்கீழ் மூன்று' என்றால் உங்களுக்குப் புரியுமா?

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல புத்தகசாலையில் காலை-மாலை வேளைகளில் அடிக்கடி 'பதினைந்தின் கீழ் மூன்று' அல்லது 'பதினைந்து மூன்று' என்ற வார்த்தைப் பிரயோகத்தை நீங்கள் அவதானிக்கலாம்-நீங்களும் ஒரு நுணுக்கமான பேர்வழியாக இருந்தால்!

அதிகம் மூளையைக் குளப்பாதீர்கள்

ஆங்கில எழுத்துக்களில் பதினைந்தாவது எழுத்து 'ஓ' [O] இது போல மூன்றாவது எழுத்து 'சி' [C]. புரிகிறதா?

''ஓசி' யில் பத்திரிகை -சஞ்சிகை வாசிப்பவர் வருகின்றார்- எச்சரிக்கை'' என்பதுதான் 'பதினைந்தின்கீழ் மூன்று'

— ஊடுருவி

## றோட்டரி அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

வலது குறைந்தவர்களின் ஆண்டையொட்டி சுழிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கால்களை இழந்த திரு. கிருஷ்ணபிள்ளைக்கும் யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், 3 சக்கர வண்டியொன்றை அன்பளித்தார். முன்னாள் றோட்டரிக் கழகத் தலைவர் திரு. இ. அரசரத்தினமும் சமுகம் அளித்திருந்தார்.

கொழும்புத்துறையில் நடக்க முடியாத நிலையிலுள்ள சிவல் தொழிலாளி திரு. இராசையாவுக்கும், யாழ். றோட்டரிக் கழக தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம். 3 சக்கர வண்டியொன்றை வழங்கினார்.

திருநெல்வேலி சைவ அநாதைகள் பாடசாலை விடுதிக்கு யாழ். றோட்டரி கழக இல்லத்தரசிகள் சங்கத் தலைவி திருமதி லூசி துரைசிங்கம், பெற்றோமாக்ஸ்ஒன்றை அன்பளிப்புச் செய்தார். [சு]

## ஸ்ரீ சக்கரமேரு பிரதிஷ்டை

[யாழ்ப்பாணம்]

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான ஸ்ரீ சக்கரமேரு பிரதிஷ்டை இன்று திங்கள் காலை நடைபெறவுள்ளது. அன்று பிற்பகல் ஸ்ரீ சக்கரயந்திர பூஜையும் நடைபெறவுள்ளது.

## குழந்தை . . .

திருமதி.மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள், கூட்டணி அங்கத்தவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இவ்வுண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர்.

பல பெண்கள், தங்கள் கைக்குழந்தைகளுடன் உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர். பிரமாண்டமான பந்தலொன்றில் இவ்வுண்ணுவிரதம் இடம் பெற்றது.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாயுடுவின் தலைமையிலுள்ள தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் இன்று தமிழக அரசுக்குஎதிராகப் பிரமாண்டமான ஊர்வலமொன்றை நடத்தினர்.

புதுடில்லி, ஜூலை 5

கடந்த பத்து நாட்களாக உத்தரப்பிரதேசத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக சுமார் 15 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கிற்கு இதுவரை 57 பேர் பலியாகியுள்ளனர்! [வெ]


## அறிவித்தல்

யாழ். நகரில் மே 31-ம் திகதி நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட

**நியூ அசோகன்ஸ்**

புடவை ஸ்தாபனம் புனரமைக்கப்பட்டு விரைவில் வாடிக்கையாளர்கட்கு தமது சேவையை அளிக்க உள்ளதென்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

உரிமையாளர்

**அசோகன்ஸ்**

232 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## ஆறுவது நினைவாஞ்சலி

### திருமதி இராசமாணிக்கம் நாகம்மா

தோற்றம்: 1924-6-9 மறைவு: 1975-7-13

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமது நல்வாழ்வொன்றே பேரவாவாய்க்கொண்டுழைந்த எமது அன்புத் தெய்வமே! இன்று மட்டுமல்ல, என்றும் நீங்கள் எமது நெஞ்சை விட்டகலாத சோதியாய்ப் பிரகாசிக்கிறீர்கள்! உங்கள் ஆன்மா என்றும் சிவனடி நீழலில் சுகம் பெறுக!

''முற்றுமே நீர் செய்த உதவிக்கு நாமென்ன மொழிவோம் உபசாரம்.''

என்றும் உங்கள் நினைவகலாத
மகள் சந்திரலேகா, மருமகன் இலட்சுமிகாந்தன்,
பேரன் அலங்காரதீபன்.
இன்பருட்டி, அல்வாய் வடக்கு, அல்வாய். 0234

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 6ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka
Regd No. QB 100?/81 P. O Box 49, Jaffna. தந்திகை தொலைபேசி: 7707